# ஆகஸ்ட்– 15– புதன்

## அன்னை மரியாவின் விண்ணேற்பு – பெருவிழா

### “ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது” (லூக் 1:47)

## முதல் வாசகம் : திருவெளிப்பாடு 11:19-12:1– 6,10

அப்பொழுது விண்ணகத்தில் கடவுளின் கோவில் திறக்கப்பட்டது. அந்தக் கோவிலில் உடன்படிக்கைப் பேழை காணப்பட்டது. மின்னலும் பேரிரைச்சலும் இடிமுழக்கமும் நிலநடுக்கமும் கனத்த கல்மழையும் உண்டாயின.வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது. பெண் ஒருவர் காணப்பட்டார் அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். நிலா அவருடைய காலடியில் இருந்தது. அவர் பன்னிருவிண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்.அவர் கருவுற்றிருந்தார் பேறுகால வேதனைப்பட்டுக் கடும் துயருடன் கதறினார்.வானில் வேறோர் அடையாளமும் தோன்றியது. இதோ நெருப்புமயமான பெரிய அரக்கப் பாம்பு ஒன்று காணப்பட்டது. அதற்கு ஏழுதலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன. அதன் தலைகளில் ஏழு மணி முடிகள் இருந்தன.அது தன்வாலால் விண்மீன்களின் மூன்றில் ஒரு பகுதியை நிலத்தின்மீது இழுத்துப்போட்டது. பேறுகால வேதனையிலிருந்த அப்பெண் பிள்ளை பெற்றவுடன் அதை விழுங்கிவிடுமாறு அரக்கப்பாம்பு அவர்முன் நின்று கொண்டிருந்தது.எல்லா நாடுகளையும் இருப்புக்கோல் கொண்டு நடத்தவிருந்த ஓர் ஆண் குழந்தையை அவர் பெற்றெடுத்தார். அக்குழந்தையோ கடவுளிடம் அவரது அரியணை இருந்த இடத்துக்குப் பறித்துச் செல்லப்பெற்றது.அப்பெண் பாலைநிலத்துக்கு ஓடிப்போனார் அங்கு ஆயிரத்து இருநூற்று அறுபது நாள் அவரைப் பேணுமாறு கடவுள் அவருக்கென ஓர் இடத்தை ஏற்பாடு செய்திருந்தார்.பின்பு விண்ணகத்தில் ஒலித்த பெரியதொரு குரலைக்கேட்டேன். அது சொன்னது : ”இதோ, மீட்பு, வல்லமை, நம் கடவுளின் ஆட்சி, அவருடைய மெசியாவின் அதிகாரம் ஆகிய அனைத்தும் வந்துவிட்டன. நம் சகோதரர் சகோதரிகள் மீது குற்றம் சுமத்தியவன், நம் கடவுள் திருமுன் அல்லும் பகலும் அவர்கள்மீது குற்றம் சாட்டியவன் வெளியே தள்ளப்பட்டான்.

**பதில்பாடல் :** ஓபீரின் பொன் அணிந்து வலப்புறம் நிற்கிறாள்
பட்டத்து அரசி.

## இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 15 : 20 – 27

சகோதர சகோதரிகளே ஆனால் இப்போதோ, இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகிறது.ஒருமனிதர் வழியாகச் சாவு வந்ததுபோல ஒருமனிதர் வழியாகவே இறந்தோர் உயிர்த்தெழுகின்றனர். ஆதாமை முன்னிட்டு அனைவரும் சாவுக்குள்ளானது போலக் கிறிஸ்துவை முன்னிட்டு அனைவரும் உயிர்பெறுவர். ஒவ்வொருவரும் அவரவர் முறைவரும்போது உயிர்பெறுவர். கிறிஸ்துவே முதலில் உயிர்பெற்றார். அடுத்து, கிறிஸ்துவின் வருகையின்போது அவரைச் சார்ந்தோர் உயிர் பெறுவர். அதன்பின்னர் முடிவுவரும். அப்போது கிறிஸ்து ஆட்சியாளர், அதிகாரம் செலுத்துவோர், வலிமையுடையோர் ஆகிய அனைவரையும் அழித்துவிட்டு, தந்தையாகிய கடவுளிடம் ஆட்சியை ஒப்படைப்பார். எல்லாப் பகைவரையும் அடிபணியவைக்கும் வரை அவர் ஆட்சி செய்தாகவேண்டும்.சாவே கடைசிப் பகைவன், அதுவும் அழிக்கப்படும். ஏனெனில், ”கடவுள் எல்லாவற்றையும் அவருக்கு அடிபணியச்செய்தார். ”ஆனால் எல்லாம் அடிபணிந்தன என்று சொல்லும்போது அனைத்தையும் கிறிஸ்துவுக்கு அடிபணிய வைக்கும் கடவுளைத்தவிர மற்றவை யாவும் அடிபணிந்தன என்பது தெளிவாகிறது.

## நற்செய்தி : லூக்கா 1 : 39 – 56

அக்காலத்தில் மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்துசென்றார்.அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார்.மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்போது அவர் உரத்தகுரலில், ”பெண்களுக்குள் நீர் ஆசிபெற்றவர் உம்வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசிபெற்றதே!என் ஆண்டவரின் தாய் என்னிடம்வர நான்யார்?உம் வாழ்த்துரை என்காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்” என்றார். அதைக்கேட்ட மரியா பின்வருமாறு கூறினார். ”ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப்பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனதுமனம் பேருவகை கொள்கின்றது.ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்.ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர்.அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்.அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார் உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார்.வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார் தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்.பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார் செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார்.மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழி மரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்து வருகிறார்”.மரியா ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்த பின்பு தம் வீடு திரும்பினார்.

**தியானம்:** இன்று திருச்சபையானது அன்னை மரியா விண்ணிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதை நினைவு கூர்கின்றது. யேசுவைப் பெற்றதால் யேசுவின் தாயானார். சிலுவை அடியில் யேசுவால் அவர் உலகத்தின் தாயாக உயர்த்தப் பட்டார். இன்று பிரிவினை சபைகளால் அதிகம் விமர்சிக்கப்படுபவராக அன்னை இருக்கின்றார், ஆனால் அன்னையின் வாழ்வும், தாழ்ச்சியும், உதவி செய்கின்ற மனப்பான்மையும் ஒரு தாயின் மிகச்சிறந்த பண்புகளே! உமது அடிமை என தம்மை ஒப்புக்கொடுத்து யேசுவை கருவில் தாங்கியது முதல் அவரை கல்லறைக்குள் அடக்கம் செய்யும் வரை அவர் பட்ட துன்பங்களும், அனுபவித்த வேதனைகளும், கேட்ட வசைமொழிகளும், பட்ட ஏளனப் பார்வைகளும் ஏராளம். சோக வாட்களால் ஊடுருவப்படுவீர் என்ற சிமியோனின் கூற்றை மனதில் இருத்தி சிந்தித்தவராக இருந்தார். தேவையில் உதவுபவராக இருந்தார், முதிர் வயதில் கற்பமாக இருக்கும் எலிசபெத்திற்கு உதவ தனது கற்ப நிலையிலும் முன்வந்தார். திருமண வீட்டர் அவமானப்படாமல் காத்தார். அதன் மூலம் யேசுவின் முதல் அற்புதம் அரங்கேற காரணம் ஆனார். குழந்தை யேசுவை ஞானத்திலும் அறிவிலும் வளர்த்தார். இவ்வாறாக பலவழிகளில் மீட்பரின் தாயாக இருந்து உதவியவரை நாம் அவமதிக்கலாமா? மரியாதைக் குறைவாக அவரைப்பற்றி பேசலாமா? இவ்வாறான மனநிலை நம்மிடம் உண்டா? எனவே நம்மையும், நமது குடும்பங்களையும் அன்னையின் பாதுகாவலில் ஒப்படைப்போம்.